**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.6/2015 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 7 |
| Name | : | முருகேசன், வயது 53 |
| Father Name/Husband Name | : | சொக்கையா |
| Village | : | மதகுபட்டி |
| Taluk | : | சிவகங்கை |
| Calling | : | ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of June 2026.

**(A1 present. A2 absent. 317 CrPC petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது சிவகங்கை மாவட்டம் மதகுபட்டி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் உள்ளேன். இதற்கு முன்பு தூத்துக்குடி கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் கடந்த 02.02.2012 ஆம் தேதி பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண்.15/2012 இ.த.ச பிரிவுகள் 380, 451 ஆக வழக்கு பதிவு செய்து உதவி ஆய்வாளர் நவநீதிகிருஷ்ணன் வழக்கு கோப்பினை விசாரணை அதிகாரியான ஆய்வாளர் ஆனந்த் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். பின்னர் அவர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் பாலமுருகேஷன், ஆனந்தி, முத்துகுமார், கணேஷன், செந்தில்குமார், மாரியப்பன், உதவி ஆய்வாளர் நவநீதிகிருஷ்ணன் ஆகியோரை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

2 பின்னர் வழக்கு கோப்பினை முதல் விசாரணை அதிகாரியான ஆனந்த் என்பவர் எடுத்துக் கொண்டு 02.02.2012 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் மாரியப்பன் அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு

வழக்குக் கோப்பினை எனது பார்வைக்கு நான் எடுத்துக் கொண்டு சாட்சிகள் பாலமுருகேஷன், ஆனந்தி, முத்துகுமார், கணேசன், உதவி ஆய்வாளர் நவநீதிகிருஷ்ணன் ஆகியோர்கள் முதல் விசாரணை அதிகாரியிடம் கூறியதுபோல் என்னிடம் கூறியதால் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

3 மேற்படி வழக்கு சம்பந்தமாக பல இடங்களில் தனிபடைகள் அமைத்து விசாரணை மேற்கொண்டு வரும்போது கோயம்புத்தூர் மாநகர், காட்டுர் குற்றப்பிரிவு சரகத்தில் மேல்படி சம்பவம் போல் நடைபெற்ற காட்டுர் குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண். 854/2012, இ.த.ச பிரிவுகள் 379 வழக்கில் எதிரியான பாட்ஷாகனி மற்றும் இரு நபர்கள் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் 10.11.2012 ஆம் தேதியில் சிறைவாசியாக இருந்து வருவதாக கிடைத்த தகவலின்படி மேல்படி வழக்கில் கோவில்பட்டி மகாராஜா நகைக்கடையில் 09.01.2012 ஆம் தேதி கடையிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்பட வீடியோ காட்சிகள் மூலம் மேற்படி காட்டுர் குற்ற எண். 854/2012 குற்ற வழக்கில் ஒப்பிட்டு பார்த்ததில் இந்த வழக்கில் மேற்படி எதிரிகள் சம்பந்தபட்டிருப்பதாக தெரிய வருகிறது.

4 பின்பு 24.11.2012 ஆம் தேதி மேற்படி எதிரிகள் கோவை மத்திய சிறையில் இருந்தவர்களை சம்பிரதாய கைது உதவி ஆய்வாளர் நவநீதிகிருஷ்ணன் செய்துள்ளார். 29.11.2012 ஆம் தேதி மேற்படி எதிரிகளை ஆஜர்படுத்த கோவில்பட்டி கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ல் PT warrant மூலம் ஆஜர்படுத்தியுள்ளேன். மேற்படி எதிரிகளை 03.12.2012 ஆம் தேதி Crlmp No. 7915/2012 ல் ஒரு நாள் போலீஸ் காவலில் எடுத்து விசாரணை செய்துள்ளேன். சாட்சிகள் வெங்கடாசலம், செல்வராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி பாட்ஷாகனி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். 04.12.2012 ஆம் தேதி எதிரி பாட்ஷாகனி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி சாட்சிகள் வெங்கடாசலம், செல்வராஜ் ஆகியோர்களை அழைத்து இவ்வழக்கின் களவு சொத்துக்களை மேற்படி எதிரி தனது வீட்டில் மறைத்து வைத்திருந்ததாக கூறியதை எடுத்து 04.12.2012 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு எதிரியின் வீட்டில் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் கல்கத்தா மாடல் வளையல் 1 ஜோடி சுமார் 31 கிராம் எடை கொண்ட தங்க நகை, பாம்பே மாடல் வளையல் 1 ஜோடி சுமார் 25 கிராம் எடையுள்ள தங்க நகை களவு சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். (**அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ.9 மற்றும் படிவம் 91 அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

5 இந்த வழக்கில் சம்பந்தபட்ட இளஞ்சிறார் மீது தூத்துக்குடி மாவட்ட இளஞ்சிறார் நீதிகுழுமத்தில் தனியாக குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 451, 380 ன் படி விசாரணையை முடித்து 13.03.2013 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

6 முதல் தகவல் அறிக்கையின் படி பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய நபர் என்றுதான் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கட்டம் போட்ட லுங்கி, புளூ கலர் சட்டை அணிந்திருந்த ஒரு ஆணும், ஒரு கருப்பு கலர் பர்தா போட்ட ஒரு பெண்ணும், ஒரு புளூ கலர் சுடிதார் போட்ட சால்வை அணிந்திருந்த ஒரு பெண்ணும் என்றுதான் புகார்மனுவிலும், அ.சா.1 ன் வாக்குமூலத்திலும் உள்ளது என்றால் சரிதான். எதிரிகளை பார்த்தால் அடையாளம் காட்டுவேன் என்று எனது விசாரணையில் அ.சா.1 சொல்லவில்லை என்றால் சரிதான்.

7 இந்த வழக்கில் அடையாள அணிவகுப்பு நடத்தபடவில்லை என்றால் சரிதான், அது வழக்கு கோப்பிலும் துலங்காது. வழக்கிற்காக கைப்பற்றபட்ட அனைத்து ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எதிரிகளை வீடியோவில் பார்த்தாக சொல்லப்படும் நிலையில் அந்த புகைப்படம் மற்றும் வீடியோவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த புகைப்பட வீடியோவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இருப்பதற்கான சிறப்பு காரணங்கள் வழக்கு கோப்பில் துலங்காது என்றால் சரிதான்.

8 அ.சா.1 அவரின் வாக்குமூலத்தில் எதிரிகள் பார்த்துவிட்டு நான்கு வளையல்கள் தேர்வு செய்துவிட்டு பணம் கம்மியாக இருப்பதாகவும், ஏடிஎம்மில் எடுத்து வருவதாக கூறி வெளியே சென்றார்கள், 5 நிமிடம் கழித்து வளையல்களை பார்க்கும்போது 4 நான்கு வளையல்கள் காணவில்லை என்று துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1 கடையின் இருப்பு கணக்கு பதிவேட்டை நான் பார்க்கவில்லை. அ.சா.1 தன்னுடைய கடையில் உள்ள சிசிடிவி காமிரா பதிவுகளை போலீசார் வாங்கி சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 14.12.2012 அன்று எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து பார்த்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9 அ.சா.2 அவருடைய வாக்குமூலத்தில் எதிரிகள் 10 நிமிடத்தில் பார்த்துவிட்டு ஏடிஎம்மில் இருந்து பணம் எடுத்துட்டு வருவதாகவும், சந்தேகம் அடைந்ததால் பார்த்தபோது 4 வளையல்களை

காணவில்லை என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 யை 02.02.2012 அன்று விசாரித்தேன். சம்பவத்தன்று அ.சா.2 யை முதல் விசாரணை செய்த அதிகாரி விசாரித்திருப்பார். அ.சா.2 மற்றும் அ.சா.3 ன் கு.வி.மு.ச பிரிவு 161 (3) வாக்குமூலத்தில் எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்று அதில் துலங்காது என்றால் சரிதான். முந்தைய புலன் விசாரணை அதிகாரி அ.சா.2 மற்றும் அ.சா.3 யை விசாரிக்காத நிலையில் அவரை விசாரித்தாக வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

10 அ.சா.2 தனது விசாரணையில் போலீசார் சிசிடிவி பதிவுகளை வாங்கி சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 32 கிராம் எடையுள்ள பெங்காலி மாடல் வளையல் காணவில்லை என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான், கல்கத்தா மாடல் வளையல் என்று சொல்லியுள்ளார். அ.சா.3 எனது விசாரணையில் நகைகள் காணாமல் போனவுடன் அ.சா.1 க்கு தகவல் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 அவரது விசாரணையில் அ.சா.1 அனைத்து ஊழியர்களையும் பரிசோதனை செய்தார் என்றும், அதன் பின் சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தார் என்றும், போலீசார் சிசிடிவி பதிவுகளை வாங்கி சென்றார்கள் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

11 ஒப்புதல் வாக்குமூலம் 04.12.2012 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது. 1 வது எதிரியிடம் 03.12.2012 அன்றுதான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்றால் சரிதான், அது எழுத்து பிழையாகும். நான் தற்காப்பிற்காக எழுத்து பிழை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் கடைசி பக்கத்தில் எனது கையொப்பத்தின் கீழே 04.02.2012 என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முன்னுக்குபின்னாக முரணாக ஆவணங்கள் தயார் செய்ததால் அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட அன்றே அத்தாட்சி தயார் செய்யப்பட்டு வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபட்டது என்றால் சரிதான். 03.12.2012 அன்று அத்தாட்சி பிறப்பித்து வழக்கு சொத்து கைப்பற்றபட்டதாக வழக்கு கோப்பில் துலங்காது என்றால் சரிதான்.

12 நீதிமன்ற ஆவணங்களின்படி அத்தாட்சியில் காலம் 3 ல் எங்கு வைத்து வழக்கு சொத்து கைப்பற்றபட்டதாக துலங்காது என்றால் சரிதான், எதிரி பாட்ஷாகனியின் வீட்டில் வைத்து கைப்பற்றபட்டதாக காலம் 4 ல் குறிப்பிடபட்டுள்ளது. ஒவ்வொரு நகைகளிலும் நகைக்கடைகளின் பெயர் இருக்கும் என்றால் சரிதான், வழக்குச் சொத்திலும் நகைகடையின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்ட

நகைகளில் நகைகடைகளின் பெயர் துலங்காது என்றால் சரிதான். அ.சா.1ன் புகார்மனுவிலும், எனது விசாரணையிலும் 32 கிராம் எடையுள்ள கல்கத்தா மாடல் வளையல் மற்றும் பாம்பே மாடல் வளையல் சுமார் 24 கிராம் எடையுள்ளது என்றும் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான்.

13 அத்தாட்சியில் கல்கத்தா மாடல் வளையல் சுமார் 31 கிராம் எடை என்றும், பாம்பே மாடல் வளையல் சுமார் 25 கிராம் எடை என்றும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்துக்கள் அ.சா.1 க்கு பாத்தியபட்டது என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது விசாரணையிலும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த படிவம் 91ல் சாட்சிகளின் கையொப்பம் பெறவேண்டிய இடத்தில் 1 வது எதிரியின் கையொப்பம் பெறபட்டுள்ளது என்றால் சரிதான்.

14 நீதிமன்றத்தில் வழக்கு சொத்துக்கள் 07.12.2012 அன்றுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்தாட்சியில் வழக்கு சொத்து கைப்பற்றபட்டதிலிருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது வரை எங்கிருந்தது என்று வாக்கு கோப்பில் துலங்காது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் பின்யோசனையுடன் தயார் செய்பட்டதால்தான் காலதாமதமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ளதைதான் வரைப்படத்திலும் குறிப்பிடபடவேண்டும் என்றால் சரிதான். பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள சோகேஸ் மற்றும் மேஜை வரைப்படத்தில் துலங்காது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் பார்வை மகஜர் மற்றும் வரைப்படம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்யததாகவும், அதன் அடிப்படையில் முதல் விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் வரைப்படம் தயார் செய்ததாகவும், சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்ததாகவும், அதன் பின்னர் நான் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாகவும், அதன் அடிப்படையில் அத்தாட்சி பிறப்பித்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த உண்மையான புகார் வாக்குமூலம் மறைக்கப்பட்டு இந்த வழக்கிற்காக பின்யோசனை செய்து பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் வழக்கு

கோப்பில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.